**தலைப்பு - 293 இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய பொழிப்பு அறிக்கை கணகீட்டு உத்தியோகத்தரிற்கு 2020 யூலை 15 ஆந் திகதி வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 30 ஆந் திகதி கணகீட்டு உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2(ஈ) மற்றும் 1.6.4(அ) பந்திகளிலுள்ள அவதானிப்புக்கள் சம்பந்தமாக கடந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட சிபார்சுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியிருக்காமை

2019 திசெம்பர் 03ஆந் திகதி 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களம் கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கை தயாரித்திருந்த போதிலும் அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 208இன் பிரகாரம் | | |
| i. | ஏனைய திணைக்களங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,689,299 தொகையான செலவுகள் மற்றும் ஏனைய பிரதான பேரேட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு | ஏனைய திணைக்களங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் ஏனைய பிரதான பேரேட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகளை தனித்தனியாகக் காட்டி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய திணைக்களங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக வரவு வைத்தல்கள் இல்லை என தயவாகத் தெரிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்படாத முழு மொத்தமான ரூபா 6,995,106 தொகை ஏனைய திணைக்களங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவாக செம்மையாக்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | |
| ii. | ஏனைய திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,167,085 தொகையான செலவுகள் மற்றும் ஏனைய பிரதான பேரேட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு காட்டப்படாத முழு மொத்தமான ரூபா 5,399,822 தொகை ஏனைய திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவாக செம்மையாக்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஏனைய திணைக்களங்களங்கினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் ஏனைய பிரதான பேரேட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகளை தனித்தனியாகக் காட்டி நிதிக்கூற்றுத் தயாரிக்கப்படுதல் வேண்டும். | ஏனைய திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் சுற்றறிக்கைக்கு இணங்க குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மேலதிக செலவு வைத்தல்கள் இடம்பெற்றிருக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றேன். |
| (ஆ) | தேர்தல் கடமைகளுக்காக உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட எனினும் மீளளிப்புச் செய்யப்படாத ரூபா 820,769 பணத்திற்காக கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கின் மீதியை ரூபா 571,801 ஆகக் காட்டி அக்கணக்கு சமப்படுத்தப்பட்டிருந்தது. நிதி செயலாற்றல் அறிக்கையில் ஆண்டின் இறுதியிலுள்ள மீதி கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்காமையினால் இவ்வித்தியாசம் ஏற்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | நிதி செயலாற்றல் அறிக்கையின் மீதியை உள்ளடக்கி கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்படுதல் வேண்டும். | இது பிழையான செம்மையாக்கல் அல்லாததுடன் நிதி செயலாற்றல் அறிக்கையின் கட்டுநிதி மீதியானது கட்டுநிதி கணக்கின் மீதிக்கு சமமானது அல்லாததனால் கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டதுடன் நிதி செயலாற்றல் அறிக்கையின் மற்றும் கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கின் மீதியானது கட்டுநிதி மீதியான ரூபா 820,768.89 உடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி திறைசேரியின் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான திரண்ட அறிக்கையின் (SA82) பிரகாரம் ரூபா 768,602,278 ஆக இருந்தும் திணைக்கள ஏடுகளின் பிரகாரம் ரூபா 802,507,077 ஆகக் காட்டியதன் காரணமாக ரூபா 33,904,799 தொகையான கணக்கிணக்கம் செய்யப்படாத மீதி அவதானிக்கப்பட்டது. | நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான அறிக்கை கணக்கிணக்கம் செய்யப்பட்டு நாளது வரையாகப் பேணப்படுதல் வேண்டும். | ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் வகைப்படுத்தல் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காததனால் குறிப்பிடப்படாததுடன் அதனை சரியாக சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பிடப்பட்டது. எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டில் மூலதன சொத்துக்களை பெற்றுக்கொள்ளல் நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ரூபா 3,490,748 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ6) ரூபா1,167,041 ஆக பதியப்பட்டதனால் ரூபா 2,323,707 கணக்கிணக்கம் செய்யப்படாத மீதி அவதானிக்கப்பட்டது. | அனைத்து நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதிகள் பதியப்படுதல் வேண்டும். | ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் வகைப்படுத்தல் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காததினால் பதியப்பட்டிருக்காததுடன் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | ஒப்பந்தக்காரருக்குப் பணம் செலுத்தும் போது 10 சதவீத பிடித்து வைத்தல்களை மிகையாக பதிவு செய்தலினால் பொது | கொடுப்பனவு வவுச்சர்களைத் தயாரிக்கும் போது முறையான பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டியதுடன் கணக்குகளின் இறுதி மீதி சம்மந்தமாக சரியான உறுதிப்படுத்தல் | இப்பிடித்து வைத்தல்களை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வைப்புக்கணக்கின் செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல்கள் ரூபா 170,068 மிகையாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது. | வைத்திருக்கப்படுதல் வேண்டும். | |
| (ஈ) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின்கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட சிறிய பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை (SPEnDP) மூடியதன் பின்னர் அமைச்சினால் திணைக்களத்தின் மொனறாகலை பிராந்திய அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள 16 மோட்டார் சைக்கிள்களைப் பொறுப்பேற்று பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் பதிவேட்டில் பதியப்படுதல் வேண்டும். | செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள 16 மோட்டார் சைக்கிள்கள் இத்திணைக்களத்தின் இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இச்சொத்துக்களின் பெறுமதி எதிர்காலத்தில் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற வட்டி வருமானம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகுவதால் காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானமற்ற பெறுவனவுகளின் கீழ் ஏனைய பெறுவனவுகளாக காட்டப்பட வேண்டிய போதிலும் அது முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலாக கருதப்பட்டதனால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து | அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற வட்டி வருமானம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவானதால் காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானமற்ற பெறுவளைவுகளின் கீழான ஏனைய பெறுவனவுகளாக காட்டப்படுதல் வேண்டும். | வட்டி வருமானம் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக பதியப்படாதனால் வருமானமற்ற ஏனைய பெறுவனவுகள் குறைத்து பதியப்பட்டுள்ளன. அதனை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். வருமானமற்ற பெறுவனவுகளில் பதியப்பட வேண்டிய வட்டி வருமானம் முதலீட்டு வருமானமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கியதனை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 1,689,868 குறைந்தும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் அத்தொகையால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

### 1.6.4 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ) பிணைப் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப்பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் ஊழியர் பிணை வைப்பு பதிவேடு பேணப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகளை தேடிக்கண்டு பிடிக்க முடியாதுள்ளது. எனினும் இதன்பின்னர் ஊழியர் பிணை வைப்பு பதிவேட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். |
| **(ஆ) சேதங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 110இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழுள்ளவாறான படிவத்திற்கு இணங்க சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | கருத்துக்கள் தரப்படவில்லை. |

1.6.5 **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்கு விதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **சிபார்சுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
| **(அ)** | 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2)ஆம் பிரிவு | ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிதிக்கூற்றுக்களுடன் சட்ட விதிகளின் மூலம் காட்டப்பட்ட காலப்பகுதிக்குள் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையையும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையையும் சமர்ப்பித்தல் வேண்டும் | 2018இன் 19ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2ஆம் பிரிவிற்கு இணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்களும் செயலாற்றல் அறிக்கையும் தனித்தனியாக தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அடுத்துவரும் ஆண்டின்போது நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையைச் சமர்ப்பிப்பேன். |
| **(ஆ)** | 2008 இன் 10ஆம் இலக்க மற்றும் 2011 இன் 13ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்ட 2006 இன் 12ஆம் இலக்க முத்திரை வரி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டம். | திணைக்களத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 25 முத்திரை வரி அறவிடப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | அதிகாரச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு முத்திரைவரி அறவிடப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்கு உட்பட்ட முத்திரை வரி அறவிடப்படாத கொடுப்பனவுகளுக்குரிய ரூபா 25 பெறுமதியைக் கொண்ட முத்திரையை கொடுப்பனவு வவுச்சர்களை ஒட்டுவதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் அக்கொடுப்பனவு வவுச்சர்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். அவ்வாறு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற கொடுப்பனவு வவுச்சர்களில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நிர்ணயிக்கப்பட்டவாறு முத்திரைக் கட்டணத்தை அறவிட்டதன் பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவாகத் தெரிவிக்கிறேன். |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை**<br>--------------------- | | | |
| **(i)** | நி.பி 1645 (அ) | ஒழுங்குமுறையான மற்றும் முறைப்படியான வாகன சம்பவக் குறிப்புக்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் சம்பந்தமான சம்பவக்குறிப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்படவேண் டிய அனைத்து பதிவுகளும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | ஒழுங்கு முறையான மற்றும் முறைப்படியான வாகன சம்பவக் குறிப்புக்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(ii)** | நி.பி 1646 | **வா**கனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் ஒரு மாதத்தின் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் 268(அ) பொதுபடிவத்தில் எழுதப்பட்ட மாதாந்த பொழிப்பின் மூலப்பிரதியுடன் நாளாந்த ஓட்ட அட்டவணையை சுயமாக திணைக்கள தலைவரின் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியபோதிலும் 37 வாகனங்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குள் மாதாந்த பொழிப்பின் பிரதியையும் நாளாந்த ஓட்ட அட்டவணையையும் கணக்காய்வாளர் தலைமை அதிபருக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 268(அ) பொது படிவத்தில் எழுதப்பட்ட மாதாந்த பொழிப்பின் மூலப்பிரதியுடன் நாளாந்த ஓட்ட அட்டவணையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஈ)** | **அரசாங்க நிருவாக சுற்றறிக்கை ஒழுங்கு விதிகள்** | | | |
| **(i)** | 1985 மே 10 ஆந் திகதிய 289 ஆம் இலக்க மற்றும் 1992 ஆகஸ்ட் 19ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | அரசாங்கத்தின் வாகனங்களில் அரசாங்க இலச்சினை பொறிக்கப்படவேண்டிய போதிலும் தலைமை அலுவலகத்தில் மற்றும் பிராந்திய அலுவலகத்தில் அரசாங்க இலச்சினை பொறிக்கப்படாத வாகனங்கள் ஓடுவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க ஒவ்வொரு வாகனத்திலும் அரசாங்க இலச்சினையும் நிறுவனத்தின் பெயரும் பொறிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தலைமை அலுவலகத்தில் மற்றும் கேகாலை பிராந்திய அலுவலகத்தில் வாகனங்களில் நிறுவனத்தின் பெயரும் அரசாங்க இலச்சினையும் பொறிப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(ii)** | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பிற்குப் பின்னர் 12 மாத காலப்பகுதிக்குப் பின்னராக அல்லது 25000 கிலோ மீற்றர் தூரம் ஓடியதன் பின்னராக எனும் விடயங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் 04 பிராந்திய அலுவலகங்களினால் வாகனங்கள் நுகர்ந்த எரிபொருளின் அளவு தொடர்பான பரீட்சிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க எரிபொருள் பரீட்சிப்பு செய்யப்படுதல் வேண்டும். | வாகனங்கள் நுகர்ந்த எரிபொருளின் அளவு தொடர்பாக பரீட்சிப்பு செய்யுமாறு பிராந்திய அலுவலகங்களின் பணிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க தற்பொழுது அப்பரீட்சிப்பு இடம்பெற்று வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்து வைத்தலும்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் உபகட்டுநிதிகளானது, அவை வழங்கப்பட்ட செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டு | பிரமாணங்களுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கின்ற உத்தியோகத்தர்கள் | உபகட்டு நிதிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் உரிய செயற்பாட்டை பூர்த்தி செய்த |

| | | |
|---|---|---|
| 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 253,320 கூட்டு மொத்த பெறுமதியான 18 செயல் நிமித்த உபகட்டுநிதிகளைத் தீர்த்து வைப்பதற்காக 11 நாட்களுக்கும் 95 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் தாமதிக்கப்பட்டிருந்தது. | சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உடன் நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் தீர்த்து வைத்தல் செய்யப்பட வேண்டுமென தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற உபகட்டு நிதிகளைத் தீர்த்துவைத்தல் முறைப்படியாக இடம் பெறுகின்றனவா என்பதனை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவாகத் தெரிவிக்கிறேன். |

**2.2 வங்கிக்கணக்கு செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் மாத வங்கி கணக்கிணக்க கூற்றுக்களின் பிரகாரம் வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த ரூபா 104,115 மொத்த தொகையான காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வழங்கி 06 மாதங்களுக்கு மேற்பட்ட எனினும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | 2019 திசெம்பர் மாத வங்கி கணக்கிணக்க கூற்றுக்களின் பிரகாரம் 06 மாதங்களை மிகைத்த 23 காசோலைகளில் குறிப்பிட்ட ரூபா 213,164.00 சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததன் பின்னர் மிகுதியாக உள்ள பணம் ரூபா104,115.87 ஆகும். அப்பணத்திற்காகவும் நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் அதன் 3(ஆ) பந்தியின் பிரகாரம் அங்கீகரித்த பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் மற்றும் கட்டுநிதித் தேவைப்பாட்டுத் திட்டம், பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்கான வருடாந்த பெறுகைத் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் சரியானதும் முழுமையானதுமான வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | 2014 பெப்ரவரி 17ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 செயல் நடவடிக்கைத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போது அதற்கான அங்கீகரித்த பதவியணியினர் மற்றும் தற்போது சேவையாற்றுகின்ற பதவியணியினர் தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். அடுத்துவரும் ஆண்டுகளிலிருந்து அத்தகவல்களை உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கிறேன். 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதித் தேவைப்பாட்டுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். வருடாந்த பெறுகைத் திட்டமும் 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பெறுகைத் திட்டத்தினை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் மற்றும் பெருந்தோட்ட கம்பனிகளின் முறையே 870 ஹெக்டயர் மற்றும் 900 ஹெக்டயர் காணிகளில் இறப்பர் மீள் பயிற்ச்செய்கை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் அவற்றில் மீள்பயிற்ச்செய்கை செய்யப்பட்டிருந்தது 578 ஹெக்டயர் மற்றும் 463 ஹெக்டயர் காணிகள் மாத்திராகும் அதற்கிணங்க நிறைவேற்றப்படாத அளவு திட்டமிடப்பட்ட அளவில் முறையே 34 சதவீதம் மற்றும் 49 சதவீதமாக இருந்தது. | நிறைவேற்றப்பட்ட அளவு திட்டமிடப்பட்ட அளவில் முறையே 66 சதவீதம் மற்றும் 51 சதவீதமாக இருந்தபோதிலும் செயல் நடவடிக்கைத்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்ட பயிற்ச்செய்கை இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தோட்ட கம்பனிகள் இலக்கிடப்பட்ட அளவில் 462.84 ஹெக்டயர்கள் மற்றும் சிறிய இறப்பர் தோட்டங்கள் இலக்கிடப்பட்ட அளவில் 577.64 ஹெக்டயர்கள் ஆக நாற்றுக்களை நடுகை செய்துள்ளது எனவும் அதற்கிணங்க நிறைவேற்றப்பட்ட அளவு திட்டமிடப்பட்ட அளவில் முறையே 53% மற்றும் 64% ஆகும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பாரம்பரியமான மற்றும் பாரம்பரியற்ற பிரதேசங்களில் 350 ஹெக்டயர் புதிய காணிகளில் இறப்பர் பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 215 ஹெக்டயர் காணிகளில் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிறைவேற்றப்படாத அளவு திட்டமிடப்பட்ட அளவில் 39 சதவீதமாக இருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டதின் மூலம் திட்டமிடப்பட்ட பயிற்ச்செய்கை இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முதலீட்டுச் சபையில் பதிவுசெய்துகொண்ட மற்றும் பதிவு செய்யாத பெரிய அளவிலான உற்பத்தியாளர்களால் ஒப்பீட்டுரீதியான நலன்களுக்கு இணங்க குறைந்த பணத்திற்கு இறப்பர் மூலப் பொருட்களை இறக்குமதி செய்ததன் காரணமாக உள்நாட்டு இறப்பர் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்காததனை காரணமாகக் கொண்டு புதிய மற்றும் மீள் விவசாயத்திற்காக விவசாயிகளை ஊக்கப்படுத்துதல் சிக்கலானதாகும். அதனால் மீள் இறப்பர் பயிற்ச்செய்கைக்கு ஈடுபடுத்தக்கூடிய காணிகளை இலாபம் கிடைக்கக்கூடிய ஏனைய |

| | | |
|---|---|---|
| | | வணிக பயிர்களுக்காக ஈடுபடுத்துவதனைப் போல் இப்போகத்தில் காணப்பட்ட அதிக மழையும் மீள்பயிற்ச்செய்கை மற்றும் புதிய பயிற்ச்செய்கையை திட்டமிடப்பட்டவாறு உரிய சதவீதத்தினை அடைந்து கொள்வதற்கு முடியாமைக்கு காரணமாக இருந்தது தயவாக சுட்டிக்காட்டுகின்றேன். |

**3.3 எதிர்பார்த்த விளைவுகளைப் (Outcome) பெற்றுக்கொள்ளமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| இறப்பர் தகவல் முகாமைத்துவ முறைமைக்காக ஒரு மென்பொருளை அபிவிருத்தி செய்து பூர்த்தி செய்வதற்கு 2016 ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தும் தொடக்க கட்டத்தினை ஆரம்பித்தல் தாமதமடைந்ததனால் பூர்த்தி செய்யும் காலம் 2017வரை நீடிக்கப்பட்டு உடன்படிக்கை திருத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த மென்பொருள் 2020 மே வரை பூரணப்படுத்தப்பட்டிருக்காததுடன் அதற்காக ரூபா 17,453,971 செலவு செய்யப்பட்டிருந்தது. | உரிய மென்பொருளை விரைவாக அபிவிருத்தி செய்து பூர்த்திசெய்தல் வேண்டும். | இறப்பர் தகவல் முகாமைத்துவ முறைமை (RIMS) நிகழ்ச்சிதிட்டமானது இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) ஆலோசனையின் கீழ் ஈ-அரசாங்க செயற்திட்டமாக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தில் அமுல்படுத்தப்பட்டது. அலுவலகத்தின் ஆலோசனை சேவை பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க அமைச்சு ஆலோசனை சேவை பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் Price Waterhouse Coopers (PWC) நிறுவனத்திற்கு இறப்பர் தகவல் முகாமைத்துவ முறைமை (RIMS) மென்பொருளை அபிவிருத்தி செய்தல் ஒப்படைக்கப்பட்டது. முறைமையின் தேவைப்பாட்டை இனங்காணும் காலப்பகுதிக்குள் PWC நிறுவனத்தினால் |

| | | |
|---|---|---|
| | | இந்நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்க கட்டத்தினை ஆரம்பித்தலில் சில தாமதங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் மீண்டும் ஒருதடவை தேவைப்பாட்டை இனங்காணும் (Requirement Analysis) கால எல்லையை நீடித்ததன் பின்னர் PWC நிறுவனத்தினால் இந்த RIMS நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது எனக்குறிப்பிடுகின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | ---------------------------------- | ------------------------ | ---------------------------- |
| **(அ)** | திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 24 உத்தியோகபூர்வ இல்லங்கள் மீளாய்வாண்டு வரையும் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளை பொறுப்பேற்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி உத்தியோகபூர்வ இல்லங்களின் உரிமையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்தின் கீழ் நிறுவகிக்கப்படுகின்ற ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களை திணைக்களத்தினால் பொறுப்பேற்பதற்கு உரிய நடவடிக்கைகள் பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் மூலம் இடம்பெற்று வருகின்றன. |
| **(ஆ)** | திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்காக ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் போது பத்தரமுல்லை பிரதேசத்தில் ரூபா 59.3 மில்லியன் செலுத்தி கொள்வனவு செய்த 75 பேச்சஸ் காணி அந்த அலுவலகத்திற்காக ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | தலைமை அலுவலகத்திற்கான வருடாந்த குத்தகை வாடகையாக ரூபா 45 மில்லியனுக்கு அதிகமான பணத்தை செலவு செய்ய வேண்டியிருப்பதனால் ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதன் மூலம் அப்பணத்தை விளைதிறனாக பயன்படுத்தலாம். | திணைக்களத்திற்குச் சொந்தமான பத்தரமுல்லையில் அமைந்துள்ள காணி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் திணைக்களத்திற்கு அண்மையிலேயே முறைப்படியாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிர்மாண நடவடிக்கைகள் சம்பந்தமாக |

| | | | |
|---|---|---|---|
| | | | மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| **(இ)** | திணைக்களத்தின் தகவல் முறைமை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை எதிர்பார்த்த காலப்பகுதியில் முடிவுறுத்திக் கொள்வதற்கு முடியாமையினால் தகவல் முறைமைக்கு நேரடியாக சம்பந்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு ஒரு ஆண்டிற்கும் 02 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கொள்வனவு செய்த ரூபா 6,571,732 பெறுமதியான கணனிகளும் கணனி துணைக்கருவிகளும் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | RIMS தகவல் முறைமை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவராண்மையின் (ICTA) சேவர் வசதிகளின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்காதிருந்தும் அமுல்படுத்தும் மட்டத்தின் போது தேவைப்படுகின்ற கணனி மற்றும் கணனி துணைக்கருவிகள் ஆகிய தொழில்நுட்பத்துடன் விரைவாக மாற்றம் பெறுகின்ற உபகரணங்களை கொள்வனவு செய்தல் விளைதிற்றதாகும். | (RIMS) நிகழ்ச்சித்திட்டத்தை 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்து முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் பிராந்திய அலுவலகங்களுக்கு இணங்க உத்தியோகத்தர் பயிற்சி தொடரினை நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. RIMS நிகழ்ச்சித்திட்ட பயிற்சி தொடரினை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நடாத்தி முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் போது RIMS நிகழ்ச்சித்திட்டத்தினை பரீட்சிக்கும் நடவடிக்கையின் போது மென்பொருள் முறைமையின் செயற்திறன் குறைவடைந்துள்ளது. அதற்கு பரிகாரமாக இந்த RIMS தகவல் முறைமையை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் (ICTA) சேவர் வசதிகளின் கீழ் ஸ்தாபிக்கப்பட வேண்டுமெனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தினால் ICTA நிறுவனத்திற்கு பல தடவைகள் இது தொடர்பாக வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்தது. அலுவலகத்தில் கடமைகளை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களுக்கு Laptop Computers களை வழங்கதல் ஆரம்பிப்பதுடன் வெளிக்கள கடமைகளை மேற்கொள்கின்ற நிறைவேற்று தரம் மற்றும் நிறைவேற்று தரம் அல்லாத உத்தியோகத்தர்களுக்கு |

வழங்குவதற்காக ICTA நிறுவனத்தின் சிபார்சின் பிரகாரம் 100 Tablet கணனி இயந்திரங்களை (TABs) கொள்வனவு செய்தல் 2018ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டது.

சில குறிப்பிடத்தக்க தாமதங்களின் பின்னர் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை தகவல் தொடர்பாடல் முகவராண்மையியினால் Production சேர்வர் வசதிகள் வழங்கப்பட்டது. RIMS மென்பொருள் முறைமையை அபிவிருத்தி செய்கின்ற Price Waterhouse Coopers (PWC) நிறுவனம் அவசரமாக அரசாங்க நிறுவனங்களின் கணனி மற்றும் தகவல் முறைமையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளிலிருந்து நீங்கி கொள்வதாக எழுத்துமூலம் தெரியப்படுத்தியிருந்ததுடன் RIMS செயற்திட்டத்தின் இறுதிக்கட்டத்திலுள்ள பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கையானது ICTA நிறுவனத்தின் ஆலோசனையின் கீழ் அரசாங்கத்தின் ஆலோசனை சேவை பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க ஏனைய ஒரு பொருத்தமான நிறுவனத்தை தெரிவுசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான அங்கீகாரம் ICTA நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

பகிர்ந்தளிப்பதற்கு மிகுதியாகவுள்ள Laptop Computers, Computer Printrs மற்றும் Tablet கணனிகளை உத்தியோகத்தர்களுக்கு

| | | |
|---|---|---|
| | | பகிர்ந்தளிப்பதற்காக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தாமதமின்றி பகிர்ந்தளித்து முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கிறேன். அனைத்து உபகரணங்களும் 03 ஆண்டு உத்தரவாத காலத்துடன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதனால் தற்பொழுது எதுவித கணனியோ அல்லது துணைக் கருவிகளோ உத்தரவாத காலத்தை மிகைத்திருக்கவில்லை எனவும் தயவாக கவனத்திற்கு தெரிவிக்கிறேன். |
| **(ஈ)** ஒரு ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் போட்டோ பிரதி (Photocopy) இயந்திரம் மற்றும் அச்சு (Printers) இயந்திரத்திற்காக கொள்வனவு செய்த ரூபா 802,902 பெறுமதியான 90 டோனர்களும் காட்றிஜ்களும் களஞ்சியத்தில் காணப்பட்டன. | கொள்வனவு செய்யும்போது தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்வது தொடர்காக கவனம் செலுத்துதல் வேண்டும். | இந்த டோனர்கள் மற்றும் காட்றிஜ்களில் நிகழ்காலத்தில் பயன்படுத்துகின்ற NPG 28 Canon 303, Epson LQ 2190 மற்றும் Laser Jet Toner 1020 மாத்திரமாகும். ஏனைய டோனர் மற்றும் காட்ரீஜ் ஆறு (6) வகைகளுக்குரிய போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் அச்சு இயந்திரங்கள் செயற்படாததன் காரணமாக பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளதனால் மிகுதியாக காட்டப்பட்டுள்ளன. அவ்வாறே டோனர் மற்றும் காட்ரீஜ் 2018-01-01 ஆந் திகதிக்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த டோனர்கள் மற்றும் காட்ரீஜ்கள் தற்பொழுது திணைக்களத்தில் பயன்படுத்துகின்ற போட்டோ பிரதி இயந்திரங்கள் மற்றும் அச்சு இயந்திரங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன என தயவாகக் குறிப்பிடுகிறேன். |

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதி, வருமானம், முத்திரை அல்லது பொருட்கள் முதலியவற்றை பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல் அவ்வாறு இல்லாதுவிடின் அரசாங்கத்தின் பணத்தை பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரை இல்லாவிடின் பொருட்களை வழங்குவது சம்பந்தமாக நிருவாகரீதியாக பொறுப்பு கூறக்கூடிய அல்லது அதிகாரத்தை ஒப்படைப்பதன் கீழ் அந்நடவடிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் அரசாங்கத்தின் கணக்கிற்குரிய வவுச்சர்களை சான்றுபடுத்துகின்றவர்களும் காசோலைகளில் கையொப்பமிடுபவர்களும் சுயமாக கடமை நடவடிக்கைகளை நேர்மையாக நிறைவேற்றுகின்றார்கள் என்பதற்கு பிணைவைக்க வேண்டியபோதிலும் அவ்வாறு செயற்படுகின்ற திணைக்களத்தின் 70 உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பணத்தை பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரை இல்லாதுவிடின் பொருட்களை வழங்குதல் சம்பந்தமாக நிருவாகரீதியாக பொறுப்புக்கூறக் கூடிய அல்லது அதிகாரத்தை ஒப்படைப்பதன் கீழ் அந்நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் அரசாங்கத்தின் கணக்குகளுக்குரிய வவுச்சர்களை சான்றுப்படுத்துகின்ற காசோலைகளில் கையொப்பமிடுகின்ற நபர்களும் சுயமாக கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுகின்றார்கள் என்பதற்கு பிணைவைத்தல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணைப்பதிவேட்டினைத் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 892 இன் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பட்டியல் திருத்தம் செய்யப்பட்டு அந்த அறிக்கை ஒவ்வொரு 03 ஆண்டுகளின் இறுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியபோதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பட்டியலை திருத்தம் செய்து அந்த அறிக்கை ஒவ்வொரு 03 ஆண்டுகளின் இறுதியிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 892 இன் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பட்டியலை திருத்தம் செய்து அந்த அறிக்கையை ஒவ்வொரு 03 ஆண்டுகளின் இறுதியிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொண்டுள்ளேன். |

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 835 (இ) இன் பிரகாரம் தனியார் தரப்பினர்களிடமிருந்து கட்டிடங்களை வாடகைக்கு எடுக்கும் போது அரசாங்கத்தின் மதிப்பீட்டாளர்களிடமிருந்து பெறுமதி தொடர்பான மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் ஒரு சதுர அடியின் வாடகை வருடாந்தம் 5 சதவீதப்படி அதிகரிக்கும் வகையில் தனியார் தரப்பினரிடமிருந்து 2016 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது ஒரு சதுர அடிக்கு ரூபா219.30 வீதம் 17405 சதுர அடிக்காக ஒரு ஆண்டிற்கு (வரியுடன்) ரூபா 45,802,860 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த அக்கட்டிடத்தின் 3048 சதுர அடிக்காக அரசாங்கத்தின் வருடாந்த மதிப்பீடு ரூபா 6,000,000 என்பதனால் ஒரு சதுர அடிக்கு ரூபா 164 ஆக இருந்தது. அதற்கிணங்க அரசாங்கத்தின் மதிப்பீடு இல்லாது பெற்றுக்கொள்ளப்பட்ட அளவிற்கு ஒரு சதுர அடிக்கு ரூபா55.3 வீதம் அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. | கட்டிடத்தின் வாடகையைச் செலுத்துதல் நிதிப்பிரமாணங்களுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். | இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பதவியணியினை மீளமைப்புச் செய்ததனால் ஏற்பட்டுள்ள பதவிகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் விஸ்தரிப்பாக நீடிப்பாக புதிய இடவசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் புதிய பகுதிக்காக அரசாங்கத்தின் மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | எதிர்பார்த்த பதவிகளுக்காக உத்தியேகத்தர்கள் நியமிக்கப்பட்டு அவை இல்லாமல் போனதால் மீளாய்வாண்டில் அலுவலக | அரசாங்கத்திற்கு மிகுந்த வினைத்திறனாக செலவு செய்தல் வேண்டும். | 2020-02-06 ஆந் திகதியிலிருந்து மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்கு வருகை தந்துள்ளதனால் அந்த |

கட்டிடவாடகை, அறைகளைப் பிரித்தல், தொலைபேசி முறைமை, தளபாட உபகரணங்கள் முதலியவற்றை கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 13,598,181 செலவினை வினைத்திறனாக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது.

அளவு பயன்படுத்தப்படுகின்றது. மேலும் இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (மேல் தரம்) புதிய ஆட்சேர்ப்புக்களிலிருந்து இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (மேல் தரம்) அறையை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஏகல் ஓயா நாற்று மேடையின் நாற்று மேடை முகாமையாளர் சிரேஸ்ட இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தராக 2020-03-16 ஆந் திகதியிலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும் உதவிப் பணிப்பாளரின் உத்தியேகபூர்வ அறைக்காக உதவிப்பணிப்பாளர் ஒருவர் தற்போது வருகைத்தந்துள்ளார். விரிவாக்கல் பிரிவிற்காக ஒரு எழுதுனர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பட்டதாரிகள் கிடைத்ததன் பின்னர் விரிவாக்கல் பிரிவினை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். அதற்கிணங்க பதவியணியினர் கட்டுப்பாட்டின் காரணமாக குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டுள்ள இட அளவிற்கு தற்பொழுது மேலதிக பணிப்பாளர் நாயகம் உதவி பணிப்பாளர் (விரிவாக்கல்) பெறுகைப் பிரிவு, விரிவாக்கல் பிரிவு ஆகிய பகுதிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் சிரேஸ்ட மட்டத்தைச் சார்ந்த மீளாய்வாண்டில் உருவாக்கப்பட்ட 04 மேலதிக பணிப்பாளர் நாயகப் பதவி மற்றும் பிராந்திய பணிப்பாளர் பதவிக்குரிய பதவிகளையும் உள்ளடக்கி 02 கணக்காளர் பதவிகள், 01 சட்ட உத்தியோகத்தர் பதவி, பிரதிப் பணிப்பாளர் பதவி, உதவிப் பணிப்பாளர் பதவி என்பன 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்டது. | அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்தின் சிரேஸ்ட மட்டத்திலுள்ள மேலதிக பணிப்பாளர் நாயக பதவி பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய பதவி வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஆரம்ப மட்டத்திற்குரிய 14 சாரதி பதவிகள் வெற்றிடமாக இருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சாரதி வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்காக பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். |